பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANADU

மலர் 20 சித்திரை 26 ஜு அகி 21 இதழ் 83
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 5-5-78

லாலா சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## மருந்துகள் விலை குறைப்பு

(கொழும்பு)

மருந்துகளின் விலைக் குறைப்பு திங்கட்கிழமை முதல் அமுலுக்குவரும்.

மருந்துகளின் புதிய விலைப்பட்டியல் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

மருந்துகளின் விலைகளை மருந்துக் கூட்டுத்தாபனம் 40 சதவீதம் குறைக்க முடிவுசெய்துள்ளது.

## பஸ்தியாம்பிள்ளை குடும்பத்துக்கு நஷ்டஈடு

(கொழும்பு)

முருங்கனில் கொலையுண்ட இரகசியப் பொலிஸாரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுகிறது.

பொலிஸ் தலைபுரிசிங்கம் ஒருவருக்கு 8000 ரூபாயும் மற்றவர்களுக்கு 6,300 ரூபா விதமும் வழங்கியுள்ளது. அரசாங்கம் திருமதி பஸ்தியாம்பிள்ளைக்கு 23 575 ரூபாவும் வழங்கியுள்ளது. மரணமான ஏனையவர்கள் குடும்பத்துக்கும் அரசு கணிசமான அளவு நஷ்டஈடு வழங்கியுள்ளது. (ம)

★ பாவனையாளர் விரும்பினால்

# இலவச அரிசிக்குப் பதில் நெல் வழங்கப்படும்

## 22-ம் திகதி திட்டம் அமுல்

(கொழும்பு)

**பங்கீட்டுக்கு இலவசமாக அரிசி பெற்றுக்கொள்ள தகுதி பெற்றவர்கள் அரிசிக்குப் பதில் நெல்லைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டம் எதிர்வரும் 22-ந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும். இதனால் 5 பேர் கொண்ட ஒரு குடும்பம் வாரம் 5 ரூபாய் 30 சதத்தை மீதப்படுத்த முடியும்.**

இந்த விபரத்தை உணவு அமைச்சர் திரு. எச். பீ. ஹேரத் நேற்று தேசிய அரசுப் பேரவையில் வெளியிட்டார்.

இவ்வாறு அரிசிக்குப்பதிலாக நெல்லைப் பெற்றுக்கொள்கிறவர்கள் 20 சதவீதம் அதிக அரிசியைப் பெறமுடியும்என்று அமைச்சர் தெரிவித்தார்.

பாவனையாளர்கள் விரும்பினால் மாத்திரமே அரிசிக்குப் பதில் நெல் வழங்கப்படும் எனவும் அமைச்சர் உறுதியளித்தார்.

கூட்டுறவு சங்கங்களின் சிறப்பு ஏற்பாடுகள் சட்டமூலத்தின்மீதான விவாதத்திற்கு பதில் அளிக்கும்போதே அமைச்சர் இதைக் கூறினார், சட்டமூலம் நிறைவேறியது.

பஸ்ஸில் சென்ற

# மாணவிகள் மீது காடையர்சேட்டை

## பேரவையிலும் எதிரொலி

(கொழும்பு)

வித்தியாலங்கார வளாகத்துக்கு பஸ்ஸில்சென்ற தமிழ் மாணவிகள் தாக்கப்பட்டனர். இதுபற்றி நேற்று தேசிய அரசுப் பேரவையில் ஆனமடுவ சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு வடிவமணி காவ ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டுவந்தார்.

அவர் பேசுகையில், வித்தியாலங்கார வளாகத்துக்கு பஸ்ஸில் சென்ற 5 மாணவிகள் சாவகளால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தாக்குதல் காரணமாக இரு மாணவிகள் அங்கே இறங்கிவிட்டனர். ஏனையவர்கள் வளாகத்துக்குச் சென்று தலைவரிடம் புகார் செய்துள்ளனர். மாணவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக அரசு வாக்குறுதி அளித்தபோதிலும் மாணவர்கள் பாதுகாப்பாகப் போக முடியாமலிருக்கிறது என்றார்.

தாக்குதலுக்குள்ளான மாணவிகளின் பெயர்களையும் அவர் வெளியிட்டார்

சிவபாக்கியம், மரியதாஸ், சகுந்தலா, உமாராணி, டெட்டா ஆகியவர்களே அந்த மாணவிகள்.

இதுபற்றி மாலை 4-10 மணிக்குத்தான் தமக்கு தகவல் கிடைத்தது என்றும் எனவே உடனடியாக பதில் அளிக்க முடியாமல் இருப்பதாகவும் பிரதிபாது காப்பு அமைச்சர் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியபடி

# தமிழர் பிரச்னைகளுக்கும் தீர்வுகாண்க!

## பேரவையில் செல்லத்தம்பு

(கொழும்பு)

தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தது போன்று தமிழர் பிரச்னைகளையும் விரைவில் தீர்த்து வைக்க அரசாங்கம் முன்வரவேண்டும் என்று முல்லைத்தீவு தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. எக்ஸ் எம். செல்லத்தம்பு நேற்று வற்புறுத்தினார்.

கூட்டுறவு சங்கங்கள் சிறப்பேற்பாடுகள் சட்ட மூலத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு திரு. செல்லத்தம்பு பேசுகையிலேயே இக்கருத்தைக் கூறினார். தமிழ்மக்களுக்கும் பிரச்னைகள் உண்டு அவைகள் தீர்த்து வைக்கப்படும் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த பெரிய சிங்கள அரசியல் கட்சிகளில் ஐக்கியதேசியக் கட்சியும் ஒன்று என்று கூறிய திரு. செல்லத்தம்பு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட பல விஷயங்களை இப்பொழுது அரசு நிறைவேற்ற முனைந்து நிற்கின்றது. மகாவலிகங்கை திசைதிருப்பும் துரித திட்டத்தை உதாரணமாகக் குறிப்பிடலாம். அதேபோன்று தேர்தல்விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட தமிழர் பிரச்னை, கூட்டுறவுத்துறை ஊழல் ஒழிப்பு போன்றவற்றையும் துரிதமாகச் செயல்படுத்த முன்வரவேண்டும் என்றார்

50 ஆண்டுகாலமாக கூட்டுறவுத்துறை நாட்டில் சீராக வளர்ந்துவந்தது. ஆனால் கடந்த ஏழு ஆண்டு காலமாக ஒரு அமைச்சரின் கீழ் இது கொண்டுவரப்பட்டதினால் ஊழல்கள் மலிந்துவிட்டன. இந்த ஊழல்களை களைந்து இத் துறையை சீர்படுத்த அரசு விரைவாக செயல்படவேண்டும் என்று திரு செல்லத்தம்பு மேலும் குறிப்பிட்டார்.

### தோல்விக்கு இதுவும் காரணம்

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு ஊர்காவற்றுறை உறுப்பினர் திரு கா. பொ. இரத்தினம் பேசுகையில், கூட்டுறவுத் துறையில் ஊழல்கள் மலிந்ததும் முன்னை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வீழ்ச்சியுற்றதற்கு ஒருகாரணம் என்றார்.

பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மக்களுக்குப் பெரும் சேவையாற்ற முடியும் என்று குறிப்பிட்ட திரு. இரத்தினம் தனியார் கடைகளிலிருந்து கூப்பன் புத்தகங்களை கூட்டுறவுக்கடைகளுக்கு மாற்ற விரும்பும் மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (ம)

இந்த ஆசிரியர்களுக்கு

# சொந்தப் பகுதிகளுக்கே மாற்றம் வழங்கவேண்டும்!

## பண்டிதரின் இன்னொரு பிரேரணையும் ஏற்கப்பட்டது

(கொழும்பு)

ஆசிரியர் பற்றாக்குறையாகவுள்ள தொகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர் வெளிமாவட்டங்களில் இருந்தால் அவர்களை சொந்தப்பகுதிகளுக்கே மாற்ற வேண்டும் என்று ஊர்காவற்றுறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் கொண்டுவந்த தனிநபர் பிரேரணையை சபை ஏற்றுக்கொண்டது.

ஆசிரியர் பதவிகளுக்கு புதிய நியமனங்கள் செய்யும்போது ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்றும் திரு. இரத்தினம் தமது பிரேரணையில் தெரிவித்திருந்தார்.

வெளி இடங்களிலிருந்து ஆசிரியர் பற்றாக்குறையுள்ள பகுதிகளுக்கு கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் அனுப்பப்படும்போது அவர்களுக்கு 30 ரூபாய் ஊக்கப்பணம் வழங்கப்படவேண்டும் என்றும் திரு. இரத்தினம் தெரிவித்திருந்தார்.

இந்தப்பிரேரணையை சபை நேற்றுமுன்தினம் ஏற்றுக்கொண்டது.

பதுளை எம். பீ, திரு. வின்சன்ட் பெரரா கொண்டுவந்த பிரேரணையொன்றும் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது

ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் முன்னேற்ற மாதிரிப் பாடசாலையொன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்று அவர் தமது பிரேரணையில் தெரிவித்திருந்தார். (ம)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

''வைத்தியர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் உகந்த சுத்தமான நல்லெண்ணெய் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் கிடைக்கும். தொடர்புகொள்ளவும்' ராதா ஒயில் மில்ஸ், 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9182

### தேவை

கீழ்க்காணும் முகவரியிலுள்ள புதிய ஹோட்டலுக்கு திறமையும், அனுபவமுமுள்ள பிணைப்பணம் கட்டக்கூடிய காசாளர் ஒருவர் தேவை. காந்த் ஹோட்டல், 74/1 கஸ்தூரியார் வீதி, (ராஜா தியேட்டர் முன்பாக) யாழ்ப்பாணம். 9206

நுணுவில் சந்திக்கு அருகாமையிலும், ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலும் உள்ள ஜனதா பீடி உற்பத்தி தொழிற்சாலைகளில், பீடி சுற்றுவதற்கு அனுபவமுள்ள பெண் தொழிலாளர்கள் உடன் தேவை. பயிற்சிபெற விரும்புபவர்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர். விபரங்களுக்கு கடிதம் மூலம் அல்லது நேரில் தொடர்புகொள்ளவும். வசந்தாஸ் மோட்டோர்மார்ட், 44, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9321

### கல்வி

இலங்கைக் கல்வித்திணைக்களத்தினரால் துணைப்பாடநூலாகச் சிபார்சு செய்யப் பெற்றுள்ள இலக்கிய மஞ்சரி IIIஆம் புத்தகம், புத்தம் புதிய பதிப்பாக, அச்சிட்டு வெளியாகிவிட்டது. விலை ரூபா 1-50. பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தனி விற்பனையாளர்கள்: சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலை. 9191


### கஞ்சா பார்சல்

(வண்ணார்பண்ணை)

இலங்கையிலிருந்து வெளிநாடு புறப்படவிருந்த உல்லாசப்பிரயாணி ஒருவரிடமிருந்து பலாலி விமான நிலையத்தில் வைத்து கஞ்சாபார்சல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. இப்பிரயாணியை சோதனை செய்தபோது இக்கஞ்சாப்பார்சல் கண்டுபிடிக்கப்பட்டதாக தெரியவருகிறது. இதனால் இவரது பயணம் தடைப்பட்டதுடன் இவர் மேலதிகாரிகளின் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.


I. C. M. A.

Foundation - Section A
Financial Accounting FAI
May 75 to Nov 77 &
Pilot paper
Seven Question papers
and suggested answers
by
A. Somasundarampillai
B. A. F. C. A.
Rs 25/-
Chartered Accountant
91½ (95) Stanley Road,
Jaffna.

Percival Hall,
9172 Jaffna.


### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் அரியாலை, கண்டி வீதி 197-ம் இலக்கத்தில் வசித்த முத்தையா மயில்வாகனம் என்பவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்து விடயமாக

மரணமெய்தியவர் மயில்வாகனம் மைம் பெண் ரோகினி அம்மா, 197, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன)
) இல. த/3362
நியாயாதிக்க)

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆட்சேபமுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 12-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

வி. சி. பரமநாதன்,
பதிவாளர்.

1978-ம் ஆண்டு பங்குனி மாதம் 2 ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

தயாரித்தது:
சு. செ. மகாதேவா,
மனுதாரின் பதிவு பெற்ற தரணி. 9203

# முதலாளித்துவத்துக்கு எதிராக எவருடனும் இணையத் தயார்''

— பீட்டர் கெனமன்

(வெள்ளவத்தை)

''முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராக யாருடனும் இணைந்து போராட நாம் தயாராக இருக்கிறோம் என்று கம்யூனிஸ்ட்கட்சிச் செயலாளர் திரு. பீட்டர் கெனமன் கொழும்பில் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தொழிலாளர் வர்க்கப் போராட்டத்திற்காக சகல முற்போக்குச் சக்திகளும் ஒன்றிணைய வேண்டும் ஐக்கிய தேசியக்கட்சியின் அரசாங்க ஜனநாயக விரோத சக்திகளுக்கு எதிராக போராட நாம் ஒன்று திரள வேண்டும்.

முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராக நாம் யாருடனும் இணைந்து போராட தயாராக உள்ளோம் ஆனால் சோசலிஸத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் எம்மோடு இணைந்து போராடலாம்.

ஜனதா விமுக்தி பெரமுனை தாங்கள் பெரும் போராட்டவாதிகள் எனக்கூறிக் கொண்டு இடதுசாரி கட்சிகளை தாக்குவதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். என்றார்.

சுபசிங்கா பேச்சு

திரு. டி. பி. சுபசிங்கா பேசுகையில், இந்நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் ஒன்றை மாத்திரம் உணர வேண்டும். சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றின் தலைமைத்துவம் இன்றி இந்த நாட்டில் இடதுசாரி இயக்கம் ஒன்றை கட்டியெழுப்ப முடியாது. எனவே தான் நானும் இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் இணைந்துள்ளேன்.'' என்றார். (உ)

## வயோதிப மாது கிணற்றில் விழுந்துமரணம்

(பண்டத்தரிப்பு)

அதிகாலை நேரத்தில் முகம் கழுவுவதற்காககிணற்றில்தண்ணீர் அள்ளச் சென்ற வயோதிப மாது ஒருவர் கால் வழுக்கி கிணற்றுக்குள் விழுந்து பலியான பரிதாப சம்பவம் அளவெட்டியில் நடந்துள்ளது. கந்தையா சின்னம்மா என்னும் 80 வயதுள்ள இந்த வயோதிப மாதின் மரண விசாரணையை சுன்னாகம் பிரிவு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கருதலிங்கம் நடாத்தினார். அங்கு தெரிவிக்கப்பட்ட சாட்சியங்களை அடுத்து நீரில் மூழ்கியதினால் ஏற்பட்ட விபத்து மரணம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது சுன்னாகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர்.

## விடுமுறையில் வந்தவர் விபத்தில் மரணம்

(பண்டத்தரிப்பு)

பிரதானவீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அரசாங்க அதிகாரி ஒருவர் பின்னால் வேகமாக வந்ததாகக் கூறப்படும் கார் ஒன்றினால் மோதப்பட்டு மரணமான பரிதாப சம்பவம் சுன்னாகம்-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நடைபெற்றது.

கொழும்பில் கூட்டுறவு இலாகாவில் உயர் அதிகாரியாகக் கடமையாற்றும் பீட்டர் மனோகரன் (வயது 39) என்பவர் லீவில் தமது சொந்த இடமான ஏழாலைக்கு வந்திருந்தாராம். இவர் சுன்னாகம் சந்தைக்கு பிரதான வீதி வழியாக சைக்கிள் ஒன்றில் வந்து கொண்டிருந்த சமயத்தில் வேகமாக பின்பக்கத்தால் வந்த கார் ஒன்று மோதியதாம். பலத்த காயங்களுடன் உடனடியாக யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு காலமானார்.

மரணவிசாரணையை திடீர் மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி கே. கனகரத்தினம் நடாத்தினார். விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

காரின் சாரதியான ரி. சந்தையாவை சுன்னாகம் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். பிணையில் அவரை செல்லுமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு அ. வே. தேவசகாயம் இவ்விபத்து சம்பந்தமான சாட்சிகளை ஆஜர்செய்தார். (உ)

## கணவன் கைவிட்டாராம் இளம்மனைவி தற்கொலை

### அளவெட்டியில் சம்பவம்

(பண்டத்தரிப்பு)

வாலிபர் ஒருவரை காதலித்து பதிவுத்திருமணம் செய்துகொண்ட இளம்பெண் ஒருவர் அந்த வாலிபர் தன்னை கைவிட்டு பிரிந்துசென்ற துயரத்தை தாங்கமுடியாது கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

அளவெட்டியைச் சேர்ந்த சிவபாக்கியம் என்னும் 18 வயது இளம் பெண்ணே இவ்வாறு விரக்தியடைந்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டவராவார்.

இவரது மரண விசாரணை தெல்லிப்பழை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா முன்னிலையில் நடைபெற்றது.

காலமானவரின் தந்தை நாகமணி [60 வயது] தமது சாட்சியத்தில் குறிப்பிட்டதாவது: ''இறந்தவர் எனது ஆறாவது மகளாகும். நேர்ஸ் ஆசிரியையாக பயிற்சிபெற்ற இவர் சில மாதங்களுக்கு முன்பு சுதுமலை வடக்கைச் சேர்ந்த வாலிபர் ஒருவரை காதலித்து பதிவுத்திருமணம் செய்தார். இருவரும் சில நாட்கள் மகிழ்ச்சியாக இருந்தனர். கடந்த புதுவருட தினத்தின் பின்பு அந்த வாலிபர் எனது மகளை கைவிட்டு பிரிந்துசென்றுவிட்டார். இதனால் எனது மகள் மிகவும் மனமுடைந்து இருக்கக்காணப்பட்டார். சம்பவதினம் காலை 8 மணியளவில் நான் வீட்டில் இல்லாதபோது வீட்டுக் கதவைப் பூட்டிவிட்டு கிருமிநாசினி குடித்துவிட்டார் நாம்கள் அயலவரின் உதவியுடன் கதவைப்பிரித்து வீட்டினுள் இறங்கிப்பார்த்தபோது அவர் இறந்திருக்கக்காணப்பட்டார். அவரின் தலையணைக்கு அடியில் அவரால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் இருக்கக் காணப்பட்டது. தனது மரணத்தையிட்டு எவர்மீதும் சந்தேகப்படவேண்டாம் என்றும் தான் மனவேதனையால் கிருமிநாசினி குடிக்கப்போவதாகவும் அதில் எழுதப்பட்டிருந்தது. இறந்தவரின் தாயார் நாகமணி சரஸ்வதியும் சாட்சியமளித்தார்.

மரணவிசாரணை அதிகாரி கிருமிநாசினி அருந்தியதினால் ஏற்பட்ட 'தற்கொலை' என்று தீர்ப்பு வழங்கினார். சுன்னாகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (உ)

## மலேசியா பயணம்

(யாழ்ப்பாணம்)

இளம் கலைஞரான செல்வன் மு. ப. நாகேந்திரன், மலேசிய தமிழிசை சங்க அழைப்பை ஏற்று நாதஸ்வர கச்சேரி செய்வதற்காக மலேசியா சென்றுள்ளார்.

இவர் சாவகச்சேரி நாதஸ்வர வித்துவான் பஞ்சாபிகேசனின் புதல்வனும், பிரபல தவில் வித்துவான் முருகப்பாவின் பேரனுமாவர்.

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவு

மேதினத்தன்று மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்திடலில் நடைபெற்ற புனித அன்னம்மாள் ஆலய கட்டட நிதிக்காக நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு:

1 வது பரிசு H 497
2 வது பரிசு C 717
3 வது பரிசு F 869

ஆறுதல் பரிசுகள்:
1 வது K 888  2 வது A 94

பரிசுகளுக்குரிய சீட்டுகளை வைத்திருப்பவர்கள், மானிப்பாய் பங்குத் தந்தையிடம் சீட்டுடன் சென்று பெற்றுக்கொள்ளுங்கள்.

பங்குத்தந்தை
9220 மானிப்பாய்.

## அறிவித்தல்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் 12,500 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு ரூபா 250/-தலைமைக் காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும். கேள்விப் பத்திரம் 78-05-12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 2-30 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். தபால் உறையில் இடது பக்கத்தில் ''சாக்கு கேள்விப் பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரம் 78-05-12 ம் திகதி மாலை 4-00 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்.

பொது முகாமையாளர்
78-05-03 9218


# வைத்திலிங்கம்ஸ்

∴ உறுதியானதும்
∴ நீடித்து உழைப்பதும்
∴ தன்னிகரற்றதுமான

'றிவர்' பிராண்ட்
கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்

பிரதான இறக்குமதியாளர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,
கொழும்பு—12
தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

ARO வெல்டிங் ரான்ஸ்போமர்

வாயுவும் மின்சாரமும் (Gas & Electric) சேர்ந்த வெல்டிங் இயந்திரங்கள் மிகவும் மலிவாகவும் குறுகிய காலத்திலும் பெறக்கூடியது.

Arul Bros & Co., (P'vt) Ltd.
Pandateruppu
தபால்மூலம் தொடர்பு கொள்ளவும்.
நேரில்: Mahendirarajah & Co.,
Stanly Road,
Jaffna. 9217

ஈழநாடு
The Eelanaadu

## வன்முறையும் அரசியலும்

நாட்டில் எந்தப் பிரச்சினைகள் தலைதூக்கினாலும் அவற்றுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதுதான் ஜனநாயகத்தின் நாகரிகம். இதற்காகத்தான் ஆட்சி மன்றங்கள் இருக்கின்றன.

ஆனால் நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கும் போது அதற்கான பொறுப்பை அல்லது பழியை செல்வாக்குள்ள எந்த ஒரு அரசியல் இயக்கத்தின் மீதாவது சுமத்துவதற்கு இரு அரசியல் இயக்கங்களும் குறிப்பாக ஆட்சி பீடத்திலிருப்பவர்களும் முயற்சி செய்வது இல்லை. இந்தியா போன்ற நாடுகளில் புதிய ஜனநாயக மரபாக மாறி வருகிறது.

நமது நாட்டில் சுதந்திரக் கட்சியினர் ஆட்சி பீடத்திலிருந்த போது நடந்த சதிப்புரட்சி முயற்சியை ஐக்கிய தேசியக் கட்சியின் மீது சுமத்துவதற்கு எத்தனிக்கப்பட்டது.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்தபோது சதிப்புரட்சி முயற்சிக்கு சுதந்திரக்கட்சி மீது பாரத்தைப் போடுவதற்கு முயற்சி செய்யப்பட்டது.

இதே போன்று 1971-ம் ஆண்டில் நடைபெற்ற ஆயுதக் கிளர்ச்சிக்கான பொறுப்பையும் அப்போது பிரதான எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மீது சுமத்துவதற்குப் பிரயத்தனம் செய்யப்பட்டது.

இப்போது தமிழ்ப் பகுதிகளில் நடைபெற்ற வன்செயல்களுக்கான பழியை இன்று பேரவையில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின்மீது போடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப் படுகிறதென்பது பேரவையிலேயே எதிரொலித்திருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் தமக்கே உரிய துணிச்சலுடனும் வாதத்திறமையுடனும் இதனை மறுத்திருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கை காந்திய வழியான அகிம்சை தான் என்று அவர் சந்தேகத்துக்கிடமின்றிப் பேரவையில் தெளிவாக்கியிருக்கிறார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் கொடுத்த விளக்கத்தைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா ஐயத்துக்கிடமின்றிப் பேரவையிலேயே ஏற்றுக் கொண்டது பாராட்டுக்குரியது.

காந்திய நெறிவழியான அகிம்சையைப் பின்பற்றும் ஓர் அரசியல் இயக்கம் என்றால் சகல விதமான வன்முறையையும் குற்றச் செயல்களையும் அது கண்டிக்கிறதென்பதுதான் அர்த்தம்.

உலக நாடுகள் பலவற்றிலும் விரக்தியடைந்த இளைஞர்கள் வன்செயல்களில் இறங்குகிறார்கள். அதே போல் விரக்தியடைந்த தமிழ் இளைஞர்களில் சிலரும் பொறுமையிழந்து இந்த வழியில் இறங்கியிருக்கலாமென்பதையும் திரு. அமிர்தலிங்கம் சுட்டிக் காட்டியதும் இளைஞர்கள் எந்த இளைஞர்களாக இருந்தாலும் அவர்களை வன்செயல்களில் ஈடுபட வேண்டாமென்றும் அவர்களது பிரச்

னைகளுக்குத் தீர்வு காணப் படுமென்றும் அரசியல் அமைப்பிலேயே சகலருக்கும் அடிப்படை உரிமைகள் வழங்கப்படுமென்றும் பிரதமர் உறுதியளித்திருப்பதும் ஆறுதலளிப்பதாகும்.

பேரவையில் இப்படி ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி நிலைமையை நாட்டிற்கு வாய்ப்பளித்த ஆளும் கட்சி உறுப்பினர் இருவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பரணவிடை ஸ்ரீபர்வதபத்தினி அம்பாள் சமேத இராமலிங்கேஸ்வர சுவாமி தேவஸ்தான மகோற்சவம் கடந்த மாதம் 23ம் தேதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று காலை பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும் நாளை மாலை பொங்கலும், விசேட பூசையும் நடைபெறும் இரவு மகோற்சவகால நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

---

## இன்று நடக்கும் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் வளாக இசைத் தமிழ் மன்றத்தின் வாராந்த கருத்தரங்குத் தொடரில் இன்று மாலை பண்ணிசைக் கலாநிதி எஸ். கே. சிவபாலன் 'பண்ணிசை மரபும் ஈழத்தில் பண்ணிசை வளர்ச்சியும்' என்னும் பொருள்பற்றிப் பேசுவார். திருநெல்வேலிப் பிரிவில் இக் கருத்தரங்கு நடைபெறும். (அ)

# வவனியா நகரில் கடைகள் சேதம்

## சிவில் உடையில் வந்தவர்கள் அட்டகாசம்

(வவனியா)

வவனியா பஸாரிலுள்ள கிறீம்ஸ் ஹவுஸ் கடையும் அதன்பக்கத்திலுள்ள இன்னொருகடையும் சாதாரண உடையில் வந்த சிலரால் அடித்து உடைத்து சேதப்படுத்தப் பட்டன.

சிவில் உடையில்வந்த ராணுவத்தினரும் பொலிசாரும் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் பொதுமக்கள் நகரில் நடமாடமுடியாத அளவுக்கு பரபரப்பு நிலவியது.

கடந்த ஆகஸ்ட்கலவரத்தின் போதும் மேற்படிகடை உடைத்து நொருக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மகா சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு சிவகாமி அம்மன் தேவஸ்தான மகாசங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறுகிறது.

## இன்றைய ஆட்சிமுடிவுக்குள் வேலையில்லாத் திண்டாட்டம் அறவே ஒழிக்கப்படும்

### ஜே. ஆர். நம்பிக்கை

(கொழும்பு)

'தற்போது இந்நாட்டில் 12 லட்சம் பேர் வேலையின்றி இருக்கிறார்கள் இன்றைய ஆட்சியின் பதவிக்காலம் முடியுமுன் நாட்டிலிருந்து வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமது அலுவலகத்தில் நடைபெற்ற ஆட்சிக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இன்றைய அரசின் நடவடிக்கைகளினால் நாட்டின் சகல பகுதிகளிலும் சகல மக்களும் அச்சமின்றி வாழக்கூடியதாக இருக்கிறது. என்றும் திரு. ஜே. ஆர். கூறினார். (இ)

## "யாழ்ப்பாணத்துக்கு'மட்டும் ஏன் இந்தச்சலுகை?"

(கொழும்பு)

இ. போ. ச. நேர்முகப் பரீட்சைகளை யாழ்.மாவட்டத்துக்கு மாத்திரம் அதிகாரிகள் அங்கேயே சென்று நடத்துகிறார்களே இது ஏன்? ஏனைய மாவட்டங்களுக்கும் இந்தச் சலுகை கொடுத்தால் என்ன என்று தேசிய அரசுப்பேரவையில் மிகிந்தலை எம். பி. கேட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பெருமளவில் விண்ணப்பங்கள் வந்ததால் அவ்வாறு செய்யப்பட்டது என்றும் ஏனைய பகுதிகளிலிருந்து விண்ணப்பங்கள் இவ்வாறு வருமானால் அதிகாரிகள் அங்கேயே சென்று பரீட்சை நடத்துவார்கள் என்று பிரதி போக்குவரத்து அமைச்சர் திரு. எச். குலரத்ன கூறினார். (ம)

## இன்று மகாஜனாவில்

## அதிபர் ஜயரத்தினம் உருவச்சிலை திறப்புவிழா

1970ம் ஆண்டிலே மகாஜனக்கல்லூரியின் வைரவிழா நடைபெற்றது அவ்விழாவின் நினைவாக ஒரு பெரும் மண்டபத்தைக்கட்ட வேண்டுமென அந்நாளில் அதிபராக இருந்த அமரர் ஜயரத்தினம் தீர்மானித்தார். அத்தீர்மானத்திற்கிணங்க ஊரிலே நிதிசேகரித்தற்கென வைரவிழாக்கட்டிடச் செயற்குழுவொன்று தெரிவு செய்யப்பெற்றது. அச்செயற்குழுவின் திறமிக்கபணியால் ஓரளவு நிதி சேகரிக்கப்பட்டது. அந்நிதியைக் கொண்டு கட்டடவேலைகளை ஆரம்பிப்பதெனவும், அதற்கு மேல் வேண்டிய நிதியை நாளுக்குநாள் சேகரித்துக் கொள்வதெனவும் தீர்மானித்தார் அதிபர். வைரவிழாக் கட்டிடத்துக்கு ஒரு சுபதினத்திலே அடிக்கல் நாட்டப்பெற்றது.

அவ்வைபவத்தை நடத்தி முடித்த அதிபர் ஜயரத்தினம் அவ்வாண்டிலேயே பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். அவருக்குப் பின் வந்த அதிபர்களும் சில நாட்களிலே இடமாற்றம் பெற்றுச் செல்ல நேர்ந்தது. அதனால் வைரவிழா நினைவுக் கட்டிடம் அடிக்கல் நாட்டப் பட்ட அளவிலேயே கிடக்க நேர்ந்தது.

1976ம் ஆண்டில் திரு பொ. கனகசபாபதி அதிபராகக் கடமை ஏற்றார். அவர் 1970ம் ஆண்டுச் செயற்குழுவிலே செயலாளராகப் பணிபூண்டிருந்தவர். எனவே, எவ்வகை இடர் நேரினும் கட்டிடத்தைக் கட்டி எழுப்புதல் வேண்டுமெனத் திடசங்கற்பம் கொண்டார். புதிய செயற்குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது. அச்செயற்குழுவின் ஒத்துழைப்போடு கட்டிடவேலை தொடங்கப் பெற்றது. இந்தக்கட்டிடத்தை அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்து, அது மேலும் தொடராமல் இருக்கின்றதேயெனப் பெரிதும் கவன்றிருந்த முன்னைய அதிபர் திரு. ஜயரத்தினம், கட்டிடவளர்ச்சி மிக்க பேருவகைகொண்டார், அடிக்கடி கல்லூரிக்கு வந்து 'வைர விழா நினைவு நிலை'யின் வளர்ச்சியைக் கண்குளிரக் கண்டார். அது பூரணப்பொலிவு பெறும் என்ற உள்ள உறுதியும் அவர் கொண்டார். இந்நிலையில் அந்தப்பேரதிபர் யாவருந்துயருறத் திடீரெனப் புவி வாழ்வை நீத்து அமரரானார்.

அமரரான தெ. து. ஜயரத்தினம் மிகச்சிறிய அளவிற் குறைவான மாணவர் தொகையுடன் நடத்தப்பட்டுவந்த கல்விக்கழகத்தைக் கல்லூரி நிலைக்குயர்த்தி, பல்வேறுகலைத் துறைகளைப் புகுத்திப் புதுமையும் மேன்மையும் பொலியச் செய்தவர். அதனால் அவரை 'மகாஜன சிற்பி' என்றுபாராட்டிக் கூறுவர். இத்தகைய பெரியாரை என்றும் நினைவுகூருதல் வேண்டுமென்பதற்காக அவரது உருவச்சிலை புதிய 'வைர விழா நினைவு நிலை'யில் நிறுவப்பட்டது. அதனோடமையாது அக்கட்டிடத்து மண்டபத்தை 'ஜயரத்தினம் நினைவுகூடம்' என்ற பெயர் சூட்டிவழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மண்டபம் இன்று பிற்பகல் 3 மணிக்கு தேசியப்பேரவை உறுப்பினரும், எதிர்க்கட்சி முதல்வருமாகிய மேன்மைதங்கிய அ. அமிர்தலிங்கம் அவர்களால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இத்திறப்பு விழாவிலே, ஜயரத்தினம் உருவச்சிலையை வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகர் திரைநீக்கம்செய்துவைக்கிறார்.

ஜயரத்தினம் நினைவுகூடத்தைப் பல்கலைக்கழக யாழ். வளாகத்தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் திறந்துவைக்கிறார். —ச. விநாயகரத்தினம் (அ)

## "உண்மையுடன்

## உழைப்பதன் மூலமே நன்மதிப்புப் பெறலாம்"

(யாழ்ப்பாணம்)

"ஊழியர்கள் மனப்பூர்வமாக விசுவாசத்துடன் தம் கடமையை செவ்வனேசெய்வதன்மூலமே பொதுமக்களுக்கு நன்மைசெய்தவர்கள் ஆவார்கள். பொதுமக்களின் மனத்திருப்தியைப் பெறுதசெயற்பாட்டை உண்மையான சேவை எனக்கருதுவதற்கில்லை"

இவ்வாறு யாழ். ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. சிவஞானரட்ணம் தமக்களிக்கப்பட்ட பிரிவு பசாரவிருந்தின்போது உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரையில் "மக்களுக்குச் சேவை செய்கின்றபோது இயல்பாக எழக்கூடிய குரோதங்களையும், வேற்றுமைகளையும் மறந்து உண்மை ஊழியர்களாக பணியாற்றி மக்கள் மத்தியில் நற்பெயர்பெறவேண்டும்" என்றார்.

இவ்விருந்தில் உரையாற்றிய புதிய முகாமையாளர்திரு சுப்பிரமணியம் தமதுரையில்,

"திரு. சிவஞானரட்ணம் அவர்களை மிக நீண்ட காலமாக நான் அறிவேன். 1967ல் கூட்டுறவு வங்கியில் சேர்ந்த காலம் முதல் நன்கறிவேன். உண்மையான உழைப்பால் உயர்ந்த சிவஞானரட்ணம் நேர்மையின் இருப்பிடமாய் நீதியின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்- பழகுவதற்கு இனியவராக விளங்கினார்" என்றார்.

திருமதிமகாதேவா தமதுரையில், அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்த ஊழியரின் வேலைக்கும் கெடுதல் செய்யாதவராகவும், பணியாளர்களின் மனதில் ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றவராகவும் அவர் விளங்கினார்" என்றார்.

## வட்டு 'திரு' தமிழகம் சென்றார்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத்தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு இந்தியா சென்றுள்ளார். இவர் தமிழ்நாட்டில் தங்கியிருக்கும்போது அங்குள்ள சிறுகைத்தொழில் நிறுவனங்களின் அமைப்பு முறைபற்றி நேரில் கண்டறிவார் என்று தெரியவருகின்றது.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமைக்கப்படவுள்ள கூட்டுறவு முறையிலான சிறுகைத்தொழில் நிலையங்களுக்கு நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெறும் பொருட்டும் திரு. திருநாவுக்கரசு தமிழ்நாடு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிகிறது.

திரு. திருநாவுக்கரசு தமிழ்நாட்டிலுள்ள பனம் பொருள் உற்பத்திதொழிற்சாலைகளையே முக்கியமாகப் பார்வையிடுவார் எனத்தெரிகிறது (இ)

## மணிவாக்கு

மனவலி, பரிவு, பரந்த சிந்தை; சகிப்பு, நடுநிலை, தன்னடக்கம், துறவு, தியானம், அகிம்சை, நீதி முதலிய அனைத்தும் உண்மையின் வடிவங்களே.

—சிவானந்தர்.

## ஏழைகளுக்கு அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பிடாரி அம்மன் கோவிலில், இம்மாதம் 5ம், 6ம் தேதிகளில் ஜெனரல் இன்டஸ்றீஸ், முருகன் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தார் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்குவார்கள்.

# 45 வயதுக்கு மேற்பட்ட மருத்துவமாதருக்கு சிங்களத்தேர்ச்சி விலக்கு

## மருத்துவ மாதர்சங்க செயலாளர்தகவல்

(யாழ்ப்பாணம்)

"45 வயதுக்கு மேற்பட்ட சகல மருத்துவ மாதர்களுக்கும் சிங்களத்தேர்ச்சி நிபந்தனையிலிருந்து விதிவிலக்கு வழங்கப்பட வேண்டும் என்று எங்கள் தொழிற்சங்கம் சுகாதார அமைச்சரையும் பொது நிர்வாக அமைச்சரையும் கேட்டுக்கொண்டதற்கிணங்க புதிய சுற்று நிருபம் ஒன்று சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 45 வயதுக்கு மேற்பட்டவர்களும் தொடர்ச்சியாக 18 ஆண்டுகள் சேவை யாற்றியிருப்பவர்களுமான மருத்துவமாதர்களுக்கு சிங்களத்தேர்ச்சியினின்றும், விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்."

இவ்வாறு அரசாங்க மருத்துவ மாதர்கள் சங்கத்தின் 4வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய சிறிலங்கா பதிற்றப்பட்ட மருத்துவ மாதர் சேவைச் சங்கச் செயலாளர் திருமதி எம். ஏ. ஏ. மல்லிகா குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு சங்கத்தலைவி திருமதி எஸ். டெய்சி அந்தோனிப்பிள்ளை தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் பின்வரும் முக்கிய தீர்மானங்கள் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தற்போது சீருடையாக மருத்துவமாதர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சேலைக்குப் பதிலாக 'கவுன்' வழங்கப்பட வேண்டும்.

''மருத்துவமாதர்'' என்று வழங்கப்படும் பதவிப்பெயரை ''குடும்பநல உத்தியோகத்தர்'' என்று பெயர்மாற்றம்செய்து தரப்படவேண்டும்.

மருத்துவ மாதர்களின் சேவைகளை மூன்று தரங்களாக வகுத்து அத்தரங்களுக்கு ஏற்ப புதிய சம்பளவிகிதங்கள் நிர்ணயிக்கப்படவேண்டும்.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவி: திருமதி ம. கதிர்த்தம்பி, செயலாளர்: திருமதி க. பூபாலேந்திரா, பொருளாளர்: செல்வி அலட்டா சவரிமுத்து. 6 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (பண். நி.)

# இன்று மகாஜனா வைரவிழா நினைவுநிலை திறப்புவிழா

[பண்டத்தரிப்பு]

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வைரவிழா நினைவு நிலையமும், கல்லூரி முன்னாள் அதிபர் ஜயரத்தினம் உருவச் சிலையும் இன்று மாலை திறந்து வைக்கப்படவுள்ளன.

கல்லூரி அதிபர் திரு பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் வைரவிழா நினைவு நிலையை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறைத் தொகுதி எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் திறந்து வைப்பார். அமரர் ஜயரத்தினம் நினைவுகூடத்தை பல்கலைக்கழக யாழ். வளாகத்தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் திறந்துவைப்பார்.

அதனைத் தொடர்ந்து நடைபெறும் பொதுக்கூட்டத்தில் அமரர் ஜயரத்தினம் நினைவுச் சிறப்புரையை கல்லூரி முன்னாள் உப அதிபர் திரு. க. கிருஷ்ணபிள்ளை, பல்கலைக்கழக கட்டடத்தை வனாக உதவிப்பதிவாளர் திரு தெ. து. தர்மராசா ஆகியோர் நிகழ்த்துவார்கள். சிலைவடித்த சிற்பி திரு. செ. லெப்பிரகாசத்தைப் பாராட்டி பலாலி ஆசிரியர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. எஸ். கந்தசாமி பாராட்டுரை வழங்குவார்.

மாணவர்கள் அளிக்கும் பல்லியம், நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

இவ்விழாவை யொட்டி சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. [இ]

# வழிமறித்துத் தாக்குதல்: ஒருவர் படுகாயம்

(சங்கானை)

வாள் வெட்டுக்கு இலக்கான சங்கானையைச் சேர்ந்த மாரிமுத்து தவராசா என்பவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது சம்பவம் சங்கானை அராலி வீதியில் நடைபெற்றது.

சம்பவதினம் தவராசா கடைக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போது மூவர் வழிமறித்துத் துவக்கினால் சுட்டும் அடித்தும் வாளினால் வெட்டியும் காயப்படுத்தினராம். சங்கானை பொலிசார் சங்கானையைச் சேர்ந்த மாணிக்கம் ஜெயசிங்கம், மாணிக்கம் துரைசிங்கம் மாணிக்கம் இரத்தினசிங்கம் ஆகிய சகோதரர்களை சந்தேகத்தின் பேரில் தேடிவருகின்றனர் முன்பு நடைபெற்ற ஒரு கொலைச் சம்பவத்தின் எதிரொலியாகவே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதென பொலிசார் சந்தேகிக்கின்றனராம்.

# கலைஞர் செல்லையா காலமானர்



சிறந்த நாடக நடிகரும், புகைப்பட நிபுணருமான குரும்பசிட்டியைச் சேர்ந்த கே. கே. வி. செல்லையா நேற்று முன்தினம் கொக்குவில் நாட்டியாலய மண்டபத்தில் காலமானர்.

இவர் இந்தியாவில் சினிமா படப்பிடிப்பாளராகவும் கடமையாற்றியிருக்கிறர். தையல் நாயகி அச்சக அதிபர் கே. சரவணமுத்துவின் சாந்தி நாடக நிலைய, நாடகக் கம்பெனியின் பிரதம நடிகராக இருந்த இவர், ஆயிரக்கணக்கான நாடகங்களில், இலங்கையிலும் இந்தியாவிலும் நடித்தவர். இந்திய கலைஞர்களுடன் சேர்ந்து நடித்த இவர் பல நாடகங்களை எழுதி மேடையேற்றியிருக்கின்றர்.

சபாலி படப்பிடிப்பு நிலைய உரிமையாளரான இவர், ஒரு சிறந்த ஓவியருமாவார். இவரின் அநேக சித்திரங்கள் பல பெரியார்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. இலங்கையில் தயாராகும் 'தெய்வந் தந்த வீடு' சினிமாபட கதாநாயகி ரேலங்கியின் தந்தையான இவர், தன் வாழ்நாள் முழுவதையுமே கலையுலகிற்கே அர்ப்பணித்துள்ளார்.

## ஈடிணையற்ற கலைஞர்

நாட்டை, சமுதாயத்தை நல்வழிப்படுத்த நாடகமே சிறந்தமார்க்கம் என்பதை நன்குணர்ந்த குரும்பசிட்டி அமரர் திரு. கே. கே வி. செல்லையா, 'கலை கலை வளர்ச்சி மன்ற'த்தை நிறுவி அதன்மூலம் 'வாக்குறுதி' போன்ற நாடகங்களைத் தயாரித்துத்தாமும் நடித்துப்பெரும் புகழீட்டியவர்.

இலங்கை வானொலியில் இவருடைய 'ஒரு பிடி அரிசி' ஈட்டிய மதிப்பு இன்றும் ரசிகர்களின் மனத்தைவிட்டகலவில்லை. 'மாணிக்கவாசகர்' போன்ற பக்தியுடன் கூடிய பலரச நாடகங்களையும் இவர் தயாரித்தளித்தார்

இவர் கொக்குவிலில் நிறுவிய கலைக்கோவில் அமரகலா நாட்டியாலய வளவில் அமரராயினர். யாழ் நகரில் 'சபாலி ஸ்ருடியோ' உரிமையாளராகத் தமது வாழ்வை ஆரம்பித்த இவரை நண்பர்கள் 'சபாலி' என்றே இன்றும் அழைப்பதுண்டு. இவர் சிறந்த ஓவியக் கலைஞர். நாடகத்திற்கான காட்சிகளைப் புதிய யுக்திகளைக் கையாண்டு தயாரிப்பதிலும் யுத்தகங்களுக்கு ஏற்ற ஏற்ற மேலுறைகளை தமது கைவண்ணத்தால் இருஷ்டிப்பதிலும் இவர் பெரும் சமர்த்தர்.

ஈடிணையற்ற இக்கலைஞர் தமது சிரேஷ்ட புத்திரி செல்வி ரேலங்கியைச் சிறந்த ஆடலரசியாக வல்லுநரைக்கொண்டு பயிற்சியளிப்பித்தார். ரேலங்கியும் சிறந்த நர்த்தகியாகித் தந்தையின் ஆசையைப் பூர்த்தி செய்தார். மகளிர் கல்லூரி, நாங்கள் வித்தியாலயம்போன்ற ஆரசினர் பாடசாலைகளில் நாட்டியம்பயிற்றி வருவதுடன் தமது வல்லை மகளிர் கல்லூரி சாவகச்சேரி இந்துக் கல்லூரி முதலிய கல்லூரிகளில் தந்தையாரின் அமரகலா கலைக்கோயில் நாட்டியாலயத்தை நிறுவகித்துப் பல ஆடலரசிகளை உருவாக்கிவருகிருர். விரைவில் திரைவானில் வரவிருக்கும் 'தெய்வம் தந்த வீடு' என்ற படத்தில் இவரே முக்கிய பாத்திரம் ஏற்று சிறப்புற நடித்துள்ளார்.

அமரரின் துணைவியார் திருமதி சி. செ. தங்கரத்தினம், செல்வி ரேலங்கி செல்லையா, செல்வி ஜெயரஞ்சனி செல்லையா, பவான் மோகன் ஆகியோரின் துயரில் நாமும் பங்கு பற்றுவோம்.

(8ம் பக்கம் பார்க்க)

## அண்ணன்—தம்பிக்கு

# புதிய சைக்கிளில் ஆசை; இளையவர் நஞ்சுக்குப் பலி!

(மட்டக்களப்பு)

"புதிய ஒரு சைக்கிள் குறித்து இரு சகோதரர்களுக்கிடையே நிலவி வந்த தகராறு தம்பியின் உயிரைப் போக்கக்காரணமாகியதாம்.

இப்பரிதாபசம்பவம் ஆரைப்பற்றை முதலாம் குறிச்சியில் நடைபெற்றுள்ளது. தற்கொலை செய்து கொண்டவர் அதே இடத்தைச்சேர்ந்த கதிரவேலு சந்திரசேகரம் (17 வயது) என்ற இளைஞராவார்.

மேற்படி மரணம் தொடர்பாக மட்டக்களப்பு நகர திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. த. வேதாதன் விசாரணை நடத்தினர். அப்பொழுது சாட்சிகள் தெரிவித்ததாவது!

காலஞ்சென்ற இளைஞர் தனக்கு ஒரு சைக்கிள் வாங்கித் தரும்படி தமையனரை நீண்டநாட்களாகக் கேட்டுவந்தாராம். மகனின் தொல்லை பொறுக்காத தமப்பனர் சமீபத்தில் ஒரு புதிய சைக்கிளை வாங்கிக்கொடுத்திருந்தாராம். தனக்கு ஒரு சைக்கிள் இல்லை என்ற காரணத்தால் அப்புதிய சைக்கிளை தனக்குத் தரும்படி காலஞ்சென்ற இளைஞர் தமையன் அடிக்கடி கேட்டு வந்தாராம் இதனால் இருவருக்கு மிடையே மனஸ்தாபம் ஏற்பட்டுவந்ததாம்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காலஞ்சென்ற இளைஞர் அப்புதிய சைக்கிளில் மட்டக்களப்புக்கு வந்து படம் பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்தாராம். தனது சைக்கிளை கேட்டுவந்த தமையனிடம் அதனை ஒப்படைத்துவிட்டு மறைந்துவிட்டாராம். சிறிதுநேரத்தின்பின்னர் அவர் வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டதாம். அங்கு பார்த்தபொழுது நச்சுத்திராவகம் குடித்து அவர் மயக்கமடைந்த காணப்பட்டாராம். மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுவரமுயற்சித்தபோது அவர் உயிர் பிரிந்துவிட்டதாம்.

# கொழும்பில் இன்று நூல் வெளியீடு

[கொழும்பு]

திரு. மு வைத்திலிங்கத்தால் எழுதப்பெற்ற சேர். பொன். இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுத் தொகுதி இரண்டின் வெளியீட்டு விழா இன்றுமாலை திரு. ஈழவேந்தன் தலைமையில் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

நல்லூர் எம். பி திரு. மு. சிவசிதம்பரம் நூலை வெளியிட்டு வைப்பார்.

திரு. வி. எஸ். துரைராஜா முதற்பிரதி பெறுவார்.

திரு எஸ். தொண்டமான், பேர்னுட் சொய்சா, கே. வி. நித்தியானந்தா உட்படப் பலர் சிறப்புரை நிகழ்த்துவர். [உ]

# 'புதிய சமுதாயம் அமைப்போம்'

—ஜே. ஆர்.

(வெள்ளவத்தை)

"தொழிற்சங்க வரலாற்றில் மாபெரும் சகாப்தத்தை ஏற்படுத்திய தொழிற்சங்கத் தந்தையான ஏ. ஈ. குணசிங்காவின் சிலையைமேதினத்தன்று திறந்து வைப்பதில் பெருமைப்படுகிறேன்"

இவ்வாறு கொழும்புவாழைத்தோட்ட சோண்டர்ஸ்பிளேஸ் சந்தியில் நிறுவப்பட்டுள்ள தொழிற்சங்கத் தந்தையான திரு ஏ. ஈ. குணசிங்காவின் சிலையை திறந்துவைத்துப் பேசுகையில் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன குறிப்பிட்டார்.

மேலும் ஜனாதிபதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

"தொழிலாளர்களுக்கு நன்மை பெறும்விதத்தில் பல திட்டங்களை அரசு சட்டங்களாக்கி செயல்படஉள்ளது.

"பழைய பல்லவியைப் பாடிக்கொண்டு சென்றதினால் தான் திருமதி பண்டாரநாயக்கா கடந்த தேர்தலில் தோல்வியடைந்தார், நாங்கள் புதிய பல்லவியைப் பாடி புதிய சமுதாயத்தை அமைக்க விரும்புகிறோம்"

பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸ திரு. குணசிங்காவின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து உரையாற்றுகையில் "தொழிலாளர்களின் நலனில் குணசிங்கா கண்ணும் கருத்துமாக இருந்தார். முதன் முதலில் தொழிற்சங்கத்தை நிறுவி தொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபட்டவர் அவரே" என்றார்.

மற்றும் பல ஐ. தே. கட்சி தொழிற்சங்கவாதிகளும் உரை நிகழ்த்தினர்கள். (உ)

## கப்பம் வாங்கியதாக வழக்கு:

# நீதிமன்றம் வராத கான்ஸ்டபிளுக்குவாரண்ட்!

[யாழ்ப்பாணம்]

20 ரூபா கப்பம் வாங்கியதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரியான பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று நீதிமன்றத்திற்கு வராததினால் அவருக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

யாழ் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் [illegible] நவரத்தினம் முன்னிலையில் இவ் வழக்கு விசாரணை செய்யப்பட்டு நேற்று தீர்ப்பளிப்பதாக இருந்தது.

இவ்வழக்கில் யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் மைக்கல், யாழ். வர்த்தகரான எஸ். வேலுப்பிள்ளை என்பவரிடம் 20 ரூபா கப்பம் வாங்கியதாகக்குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நேற்றுநீதவான் கே.வி நவரத்தினம் முன்னிலையில் ஆஜரான எதிரியின் மனைவி, தாயார் காலமானதால் கணவன் ஊருக்குச் சென்றுவிட்டதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நீதவான் எதிரிக்கு வாரண்ட் பிறப்பித்து வழக்கை இம் மாதம் 8-ம் தேதிக்கு ஒத்திவைத்தார். எதிரி வராததினால் நேற்று தீர்ப்பு வழங்கப்படவில்லை.

# டாக்டர் நித்தியானந்தனின் சேவைக்கு யாழ். எம். பீ. பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"பல்வைத்திய சேவையை சிறந்த சமூக சேவையாய்ச் செய்துவரும் டாக்டர் கி. நித்தியானந்தன் இலங்கையின் பல பாகங்களிலும் நல்ல சேவை புரிந்துள்ளார். சாம்பியா, இங்கிலாந்து முதலான வெளிநாடுகளில் அவர் பணி புரிந்தபோதிலும் திரும்பவும் நம் நாட்டிற்குத் தொண்டு செய்ய வந்ததையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். திரு. நித்தியானந்தனின் பல்வைத்திய சேவை இந்த நாட்டு மக்களுக்குப் பெரிதும் பயன்படுவதாக அமையட்டும்"

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் பல்வைத்திய நிபுணர் திரு கி. நித்தியானந்தனால் ஆரம்பிக்கப்பட்ட பல்வைத்திய நிலையத் திறப்பு விழாவில் பங்குபற்றி உரையாற்றிய யாழ்ப்பாணம் தேசிய பேரவை உறுப்பினர் திரு வெ. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பல்வைத்திய நிலையத்தை மங்கள விளக்கேற்றித் திறந்து வைத்த முன்னாள் சுகாதார சேவை அதிபட்சகர் திரு. கே. கனகரத்தினம் பேசுகையில் 'சென்ற இருபத்தைந்து ஆண்டுகாலமாக பல் வைத்தியத்துறையில் டாக்டர் கி. நித்தியானந்தன் ஆற்றிய சேவை மகத்தானது. நாட்டுப்பற்றுக் காரணமாக திரு. நித்தியானந்தன் தொடங்கியிருக்கும் இப் பல்வைத்திய நிலையம் பலருக்கும் பயன்பட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.' என்றார்.

பல்வைத்திய நிபுணர் திரு. கி. நித்தியானந்தன் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசினார். (உ)

# பரு. டிப்போவிற்கு 3 புதிய பஸ்கள்

[நெல்லியடி]

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிற்கு மூன்று புதிய பஸ் வண்டிகள் இ. போ. ச. மேலிடத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இம் மூன்று புதிய பஸ் வண்டிகளும் "அசோக் லேலண்ட்" ரகத்தைச் சேர்ந்ததாகும். மிக விரைவில் மேலும் இரண்டு பஸ் வண்டிகள் பருத்தித்துறை டிப்போவிற்கு வந்து சேரும் என டிப்போ உயரதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

பஸ் பிரயாணிகளின் நிலையை வடமராட்சிப் பகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களும் தொழிற்சங்கங்களும் போக்குவரத்து அமைச்சர் எம் எச். மொகமட்டுக்கு அறிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

[யாழ்ப்பாணம்]

பத்தைமேனி கொலை முயற்சி வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் ஜனப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் பத்தைமேனியில் 75ம் ஆண்டு ஜூன் 14ம் தேதி பொன்னன் இட்டிணனை கொலைசெய்ய முயற்சித்ததாக மு கார்த்திகேசு, சு செல்லத்தம்பி ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம், சட்டத்தரணி எஸ். பிரான்சிஸின் அனுசரணையுடன் ஆஜரானர். அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் வழக்கை நடத்தினர்.

விசாரணையை தொடர விரும்பவில்லையென்றும் எதிரிகள் நிரபராதிகளென்றும் ஜூரி சபையினர் ஏகமனதாக தெரிவித்ததைத் தொடர்ந்து எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டனர். [உ]

# பஸ் சேவை சீர்கேடு

[நீர்வேலி]

பருத்தித்துறை யாழ்ப்பாணம் பஸ்சேவை சீரின்மையால் பிரயாணிகள் மிகவும் கஷ்டமடைகின்றார்கள். காலை 9 மணிக்கு பஸ்தரிப்பு நிலையத்திற்கு வந்தவர்கள் நீண்ட நேரம் வேகக் கொதிக்கும் வெய்யிலில் நின்றும் நண்பகல் வரை பஸ் கிடைக்காமல் தமது பிரயாணத்தை நிறுத்தியதும் உண்டு.

வான் சேவை செய்யும் பிரயாணிகள் மிகவும் கஷ்டமடையும் இப்பகுதி பஸ் சேவைக்குக் கூடிய பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்தித் தருவதோடு கூடியளவு சேவைகளையும் ஏற்படுத்தித் தருமாறு பிரதேச முகாமையாளரைக் கேட்டும் மகஜர் ஒன்றை வலி கிழக்கு தென்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கம் அனுப்பி வைத்துள்ளது. [உ]

# அனுராதபுரத்தில் இதுவரை மின்னலுக்கு அறுவர் பலி

[அனுராதபுரம்]

அனுராதபுரத்தில் மின்னலுக்கு இதுவரை 6 பேர் பலியானார்கள்.

சப்போஸ்மாஸ்டர் இ. பீ. குணரத்தினவும் (வயது 29) அவரது நண்பர் எச். ஏ. டி. சுவர்ணபாலாவும், பலத்த மழை பெய்துகொண்டிருந்த சமயம் நீராடிக்கொண்டிருந்த போது மின்னலினால் தாக்குண்டு மரணமானார்கள்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். எம். விஜயசேன, மரணவிசாரணை நடத்தி மின்னலினால், ஏற்பட்ட தாக்குதலால் மரணமானார்கள் எனத் தீர்ப்பளித்தார்.

சில தினங்களுக்கு முன் அனுராதபுரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 சகோதரிகள் மின்னலுக்கு பலியானார்கள் (உ)

# "கூட்டுறவு இயக்கம் சீர்குலைந்ததற்குக் காரணம் என்ன?"

[சங்கானை]

கூட்டுறவு இயக்கம் இன்று இழி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது தனியார் துறையின் போட்டி, நிர்வாகச் சீர்கேடு, முகாமையின் திறமையின்மை, விரக்தியின் காரணமாக பணியாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மனக்கசப்பு, வங்கியில் பணம் கடன் கொடுக்கும் கொள்கை, நடைமுறை, அரசியல் தலையீடு முதலியன இதற்கு இந்நிலைக்குக் காரணங்களாக உள்ளன என்று கூட்டுறவு ஊழியர் [வட பிராந்திய] தொழிற்சங்கத் தலைவர் திரு. சி. க. சிற்றம்பலம் கூட்டுறவுச் சங்கங்களை புனரமைப்புச் செய்யும் கமிட்டிக்கு சமர்ப்பித்த மகஜரில் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் தலைமையில் அரசாங்கம் கூட்டுறவுத்துறையை மீண்டும் புனரமைக்க ஒரு கமிட்டியை நியமித்துள்ளது தெரிந்ததே.

சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- சங்க நிர்வாகத்தின் பணியாளரை நியமிக்கும் முறையில் பணிப்பாளர்களின் உறவினர்கள் நியமனம்பெற்று சங்கத்தின் நிதி நிலைமையும் மோசமடையச் செய்துள்ளனர். இவற்றிற்கெல்லாம் கூட்டுறவுத் திணைக்களம் கூட்டுறவும் பணியாளர் ஆணைக்குழுவும் கண்மூடித்தனமான முறையில் அதிகாரங்களையும் வழங்கியுள்ளது.

இப்பணியாளர் நியமனங்களிலும் விசுவாசமற்றதும், ஒத்துழையாததுமான பணியாளர்களை எங்கேயாவது அமர்த்தி அவர்களது வேலைத் தரம்பற்றியோ அல்லது மதிப்பீடு இன்றியோ அமர்த்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது. சில பணியாளர்கள் 6 வருடங்கள் நிரந்தரமில்லாத முறையில் பணிப்பாளர் சபையின் அசமந்த நிலையினால் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவுப் பணியாளர்களது சம்பளம் மிகக் குறைந்த நிலையிலும் இருக்கின்றது. ஏட்டிக்கு விசாரணைகள் குறிப்பிட்ட காலங்களுக்குள் நடைபெறுவதில்லை. மேல் முறையீடுகள் எந்தவிதமான பயனும் விளைவதில்லை. காலதாமதத்தின் காரணமாக கூட்டுறவுப் பணியாளர் கமிஷன் இருக்கின்றதா என்ற சந்தேக நிலையும் எழுந்துள்ளது என்றும் இம்மகஜரில் கூறப்பட்டுள்ளது. (உ)

# புனர் நிர்மாணம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு - குருக்கள்மடம் கண்ணகை அம்மன் ஆலய மூலஸ்தானம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. [உ]

# கூட்டணிக் கிளைகள்

(கொடிகாமம்)

சாவகச்சேரித் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு வருகின்றன. [உ]

# போக்கு வரத்துச் சிரமம்

[மட்டக்களப்பு]

வலையிறவுத் துறைக்கென வழங்கப்பட்ட மோட்டார் பழுதடைந்துள்ளது. இதனால் பிரயாணிகள் இருகரைகளிலும் போக்குவரத்து வசதியின்றி அவதியுறுகிறார்கள்.

இச்சம்பவத்தைப் பயன்படுத்தி தனியார் மீன்பிடித் தோணிகளும், மோட்டார் பூட்டப்பட்ட வள்ளங்களும் அதிகமாகச் சம்பாதிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பணம் சம்பாதிக்கும் நோக்கில் அளவுக்கதிகமான பிரயாணிகளை ஏற்றிச் சென்று கடந்த காலங்களில் விபத்துக்களும் ஏற்பட்டுள்ளனவாம்.

எனவே மட்டக்களப்புப் பிரதேச பொறியியல் பிரிவினர் மேற்படி கடவைக்குரிய இயந்திரத்தை விரைவில் திருத்தி அமைப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளுதல் அவசியமாகும் என்றும் மேற்படி படகு திருத்தப்படும் வரைக்கு பிரயாணிகளுக்கு மட்டும் நடாத்தப்பட்ட திறந்த மோட்டார்ப் படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படியும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பிரயாணிகள் வற்புறுத்துகின்றார்கள். [உ]

# நாளை மேடையேறும் நாடகங்கள்

[வண்ணார்பண்ணை]

மண்டைதீவு கிழக்கில் நாளை இரண்டு நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

மண்டைதீவு இளங் குரல் நாடகமன்றம் இவ்விரு நாடகங்களையும் மேற்படி நிதிக்காக மேடையேற்றவுள்ளது.

மண்டைதீவு சிறுபிலம் மைதானத்தில் நடைபெறவிருக்கும் இந்த நாடகங்களுக்கு மண்டைதீவு கிளைப்பாரிய கிராமத் தலைவர் திரு. மு. நவரத்தினராசா தலைமை தாங்கவிருக்கிறார்.

"பண்டியம்பதிக் காவலன்" என்ற வரலாற்று நாடகத்தையும், "ஓடம் நதியினிலே" என்னும் சமூக நாடகத்தையும் மேற்படி இளங்குரல் நாடகமன்றம் மேடையேற்றவுள்ளது. [உ

• • •

# 'சுருட்டுத் தொழிலாளருக்கு உரியகூலிகிடைக்கவேண்டும்

[யாழ்ப்பாணம்]

'எமது சங்கம் மேற்கொண்ட தீவிர முயற்சியினால் இன்று தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது.' என்று இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்க 18வது மேதின விழா தாவடியில் நடைபெற்றபோது சங்கத் தலைவர் திரு. இ. முதலியார் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

'எமது சங்கம் அரசுடன் கடந்த 6 ஆண்டுகளாக சுருட்டுக்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியதன் பயனாக மாலைதீவுக்கு சுருட்டுகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதனால் உள்ளூரிலே சுருட்டுக்கு போதியளவு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

6 வருடத்துக்கு முன் சுருட்டுக்களை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று நான் கூறிய பொழுது தொழிலாளர்கள் அலட்சியம் செய்தார்கள். ஆகவே எமது சங்கம் செய்த தீவிர முயற்சியினால் இன்று தொழிலாளர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது அத்துடன் மாதம் நிரந்தர வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் தொழிலாளர்கள் தமது சரி கூலியை முதலாளிமாரிடம் வாங்க வேண்டும். கூலியை குறைத்து தீர்க்கும் முதலாளிகளிடம் வேலைக்கு செல்லாது சரியாக தீர்த்த பின்தான் வேலைக்கு செல்லவேண்டும் என்றார்.

காரியதரிசி க. தங்கராசாவும் பேசினர். [உ]

# பரிபாலன சபை உறுப்பினர்கள்

[யாழ்ப்பாணம்]

கச்சாய் கண்ணகை அம்மன் கோவில் பரிபாலனசபை கோவில் முன்றலில் நடந்த பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

கீழ்காணும் 12 பேர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர் திருவாளர்கள் க. அருணாசலம் இ. இ. சின்னத்தம்பி, ச. கந்தையா, வ. சின்னத்தம்பி, மு துரைச்சாமி, இ. செல்லையா மு. வேலும்பிள்ளை, அ. காங்கேசன் செ. மகேந்திரம். இ. ஆறுமுகம், மு. சரவணத்தம்பி இ கந்தையா

இந்த 12 உறுப்பினர்களுடன் நிரந்த தர்மகர்த்தாக்கள் ஆறுபேரும் பூசகரால் நியமிக்கப்பட்ட ஆறுபேரும் சேர்ந்து 24 பேர் கொண்ட

[illegible]

சபை ஆலயத்தின் பரிபாலனத்தை நடத்தி வரும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது [உ]

# துப்பாக்கிச் சூட்டுக்கு விவசாயி பலி
## மட்டக்களப்பில் சம்பவம்

[மட்டக்களப்பு]

வயலுக்குச் சென்று திரும்பிய விவசாயி ஒருவர் மட்டக்களப்பு வாவியில் சுட்டுக் கொலை செய்யப்பட்டதை அடுத்துச் சந்தேக நபர்களான முனைக்காடு வாசிகள் இருவரைத் தேடிப் பொலிசார் வலைவிரியுள்ளார்கள். கடந்த ஞாயிற்றுக் கிழமை காஞ்சூரன் குடா துறையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. கொலை செய்யப்பட்டவர் முனைக்காடு வாசியான வ. கணபதிப்பிள்ளை [30 வயது] என்பவராவர்.

கன்னன்குடா சுடுநீ மரண விசாரணை அதிகாரி திரு. கிருஷ்ணபிள்ளை விசாரணை நடாத்தினர் இதற்கான சாட்சியங்களை மட்டக்களப்புப் பொலிசைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். இரத்தினசபாபதி ஆஜர் செய்திருந்தார்.

மரண விசாரணையின்போது அறிய வந்ததாவது:

சம்பவ தினம் கொலையுண்டவர் வயலுக்குச் சென்று பின்னேரமாகிய பின் வேறு இரு விவசாயிகளுடன் வீடு திரும்புகையில் காஞ்சூரன்குடா துறையைய் அண்மியபோது தம்முடன் வந்த இருவரை விட்டுச் சற்று முந்தி வந்து துறையில் வள்ளம் வருவதை அவதானித்துக் கொண்டு நின்றதாகவும் அப்போது காட்டுப் பக்கமாக இருந்து வந்த இருவர் இவரை துப்பாக்கியால் சுட்டு விட்டு ஓடி மறைந்து விட்டதாகவும் கணபதிப்பிள்ளை துறையடியில் நீரில் பிணமாகக் கிடக்கக் காணப்பட்டதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

மட்டக்களப்பு சட்டவைத்திய அதிகாரி திரு. எஸ். பொன்னுச்சாமியும் சாட்சியமளித்தார்.

கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

[யாழ்ப்பாணம்]

கடந்த மாதம் 29ம் திகதி 'ஈழநாடு' இதழில் 19 ப. நோ. கூ. ச. ஊழியருக்கு வேலை நிறுத்த அறிவித்தல் என்ற தலைப்பில் வெளியான செய்தி தவறானது என்று மானிப்பாய் கோவிற்பற்று ப நோ கூ. சங்கப் பொதுமுகாமையாளர் அறிவிக்கிறார். (உ)

# அடிக்கல் நாட்டுவிழா

(வண்ணார்பண்ணை)

அராலிதெற்கு சனசமூக சேவா சங்க கட்டிட அடிக்கல் நாட்டுவிழாவும், சமூகசேவைக் கருத்தரங்கும் இன்று அராலியில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி சங்கத்தினரால் சிரமதான மூலம் கட்டப்படவிருக்கும் இச் சங்க கட்டிடத்திற்கான அடிக்கல்லை வட்டுக்கோட்டை எம். பீ. திரு. தா. திருநாவுக்கரசு நாட்டிவைப்பார்.

இதையடுத்து அராலி கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கும் சமூக சேவைக் கருத்தரங்கில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு, வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் உட்பட பலர் உரையாற்றுவர்.

நமீபியாவைவிட்டு வெளியேறுவிடின்

# தென் ஆபிரிக்கா மீது பொருளாதார ஆயுதத்தடை!

## ஐ. நா. பொதுச் சபையில் ஏகமனதாக தீர்மானம்

நியுயோர்க், மே 4

நமீபியாவைவிட்டு தென் ஆபிரிக்கா வெளியேறுவிட்டால் அந்த நாட்டின்மீது பொருளாதார எண்ணெய் ஆயுதத்தடைகளை உலக நாடுகள் விதிக்கவேண்டும்

இவ்வாறு உலக நாடுகளைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 119 நாடுகள் வாக்களித்தன. எதிராக எந்த நாடும் வாக்களிக்கவில்லை.

நமீபியாவைவிட்டு தென் ஆபிரிக்கா வெளியேற வேண்டும் என்று நீண்டகாலமாக உலக நாடுகள் பல கோரிவந்த போதிலும் தென்ஆபிரிக்கா தமது கொள்கையை மாற்றும் விருந்துவருகிறது. (இ)

## புதிய ஆப். குடியரசில் மனிதப்பண்பு மதிக்கப்படும்

### ஜனாதிபதி நூர்முகம்மது

காபூல், மே. 4

ஆப்கானிஸ்தான் புதிய ஜனநாயகக் குடியரசு இஸ்லாமிய க் கோட்பாடுகளுக்கமைய ஆட்சி நடத்தும் என்றும் அங்கே மனிதப் பண்புக்கு உரிய மதிப்பளிக்கப்படும். என்றும் ஆப்கானிஸ்தான் புதிய ஜனாதிபதி ஜனாப் நூர் முகம்மது டராகி தெரிவித்துள்ளார். இதை காபூல் வானொலி அறிவித்தது.

அணிசேராக் கொள்கையையே புதிய குடியரசு தமது வெளிநாட்டுக் கொள்கையாகக் கடைப்பிடிக்கும் என்றும் ஜனாப் நூர் முகம்மது தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியன் அதிபர் திரு. பிரஷ்னேவ் ஆப்கானிஸ்தான் புதிய அதிபரையும், புதிய குடியரசையும் பாராட்டி ஜனாப் முகம்மதுவுக்கு தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபடும் அரசுக்கு சோவியத் யூனியனின் ஆதரவு என்றும் இருக்கும் என்று அப்பாராட்டுத் தந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## திருட்டுக் குற்றச்சாட்டு: இரு சிறுவருக்கு பிரம்படி

(மட்டுவில்)

சாரம், சேட் திருடிய இரண்டு சிறுவர்களுக்கு தலா ஆறு பிரம்படி கொடுக்கும்படி, சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த ஆர் இரவீந்திரன் (13 வயது), கே. குமார் (12 வயது) ஆகிய இரண்டு சிறுவர்மீதும் சாவகச்சேரிப் பொலிசார் மேற்படி திருட்டுக் குற்றம் சாட்டியிருந்தனர்.

சாவகச்சேரியிலுள்ள கடையொன்றில் இவர்கள் திருடிய போது இவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனராம். விசாரணையின்போது சிறுவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

நீதிபதி தலா ஆறு பிரம்படி கொடுக்கும்படியும், அவர்களை அச்சுவேலி சிறுவர் சீர்திருத்த பாடசாலைக்கு அனுப்புபடியும் தீர்ப்பளித்தார். (உ)

## பஸ் விபத்து: 11 பேர் பலி!

புதுடில்லி, மே 4

பீகாரில் நேற்று இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 11 பேர் பலியாகிஉள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. (இ)

## வருடாந்த கூட்டம்

(கொழும்பு)

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அடுத்த மாதம் 11ம் திகதி நடைபெறவிருக்கிறது (உ)

## படகுச்சேவைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

வலையிறவு வவுணதீவு துறையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தபடகுச் சேவை யந்திரக் கோளாறு காரணமாக தடைப்பட்டுள்ளது. இதனால் இரு கரைகளிலும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பிரயாண வசதியின்றி அவதியுறுகிறார்கள்.

மேற்படி கடவையில் பிரயாணிகள் ஆளுக்கு ஒரு ரூபாவும் சயிக்கிளுடன் இரண்டு ரூபாயும் தனியார் படகுகளுக்கு மீன்பிடித்தோணிகளுக்கும் கொடுத்து பிரயாணம் செய்கிறார்கள். பிரயாணிகளின் நலன்கருதி மேற்படி துறையில் விரைவில் இயந்திரப்படகுச் சேவையை ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பிரயாணிகள் கோருகின்றார்கள். (உ)

## பஸ் பிரயாணிகள் கோரிக்கை

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச் சோலைக்குக், கன்னன்குடாவுக்குமிடையிலான பகுதிகளை இணைத்து புதிய பஸ் சேவையொன்றை ஏற்படுத்துமாறு அப்பகுதி பிரயாணிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

தற்போதுள்ள கரவெட்டி- ஆயித்தியமலை பஸ் சேவையும் அப்பகுதிப் பிரயாணிகளுக்கு ஏற்றவகையில் நேர அட்டவணை தயாரிக்கப்படாமையால் படுவான்கரைப் பிரயாணிகள் புகார் தெரிவித்து வருகிறார்கள். இப் பஸ் சேவையை வலையிறவுத்துறை கடவை நேர அட்டவணையுடன் இணைத்ததாக சேவையை மேலும் அதிகரிக்குமாறு கோரப்படுகின்றது. (உ)

## மகாராணியின் பணிப்பெண் தற்கொலை!

லண்டன், மே 4

எலிசபெத் மகாராணியின் பக்கிங்ஹாம் அரண்மனை பணியாளரான பெண்மணியொருவர் அம்மாளிகையிலேயே தற்கொலை செய்து கொண்டார்.

வேலையிலிருந்து ஓய்வு பெறவிருந்த இவர் இதனால் இலகாலமாக வேதனைகொண்டிருந்தாராம்.

அளவுக்கு மதிகமான போதை வஸ்துக்களை அருந்தியே இவர் தற்கொலை செய்து கொண்டாராம்.


# புத்தாண்டுக்கு புத்தம் புதிய ஒரு சிகரெட்




# வூட்பைன்

உலகப் புகழ் பெற்ற
டபிள்யு. டீ. & எச். ஓ. வில்ஸின்
தயாரிப்பு. வேர்ஜினியா புகையிலை
உள்ள பில்ற்றர் சிகரெட்

24 சதம் மட்டுமே

Grant K & E 566

நாகம்ஸ் (கல்முனை)
தினசரி 6-45, 10-00
விஜயகுமார் நடித்த
தாயில்லாக்குழந்தை

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-45
நாகேஷ்-விஜயலலிதா நடித்த
தேன் கிண்ணம்

வெலிங்டன் (யாழ்: நகர்)
தினசரி 4 காட்சிகள்
சோதி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர்.—அஞ்சலிதேவி
மர்மயோகி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த
ஜானகி சபதம்

Regal (Jaffna) 2nd Crowded Week
Daily 4-45, 7-00 and 9-60 p.m
TONY CURTIS ROGER MOORE in
SPORTING CHANCE
(Color) (Spy Film)

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

5-வது வெற்றி வாரம்
ராணி (யாழ்; நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

12-ம் திகதி முதல் சிவாஜி — மஞ்சுளா நடித்த
உ த் த ம ன்

சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., விஜயா, நாகேஷ் நடித்த
நல்லநேரம்

# "அரசஊழியர்கள் மீதான
# புகார்களை ஆதாரத்துடன் செய்யவேண்டும்"

(கொழும்பு)

"தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்கள் அரசாங்க ஊழியர்களுக்கு எதிராக புகார் செய்வதானால் தகுந்த ஆதாரங்களுடன்தான் புகார்செய்ய வேண்டும்" என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"மக்கள் எமக்கு முழு அதிகாரம் அளித்துள்ளனர். எந்தச் சட்டத்தையும் எம்மால் ஆக்க முடியும். இதற்குத் தக்கவகையில் எம். பிக்கள் முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும். புதிய பாதையில் சுபீட்சத்தரும் பாதையில் நாம் செல்கிறோம். அனைவரும் அச்சமின்றி சுதந்திரத்துடன் எமது ஆட்சியில் வாழலாம்.

விவசாயிகள் எமது ஆட்சியில் விமோசனம்பெற்று வாழலாம். மூலப்பொருட்கள், இயந்திர சாதனங்கள் இறக்குமதிக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

எமது ஆட்சிக் காலத்தில் நாம் 12 லட்சம் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்போம். உலக வங்கி அளிக்கும் கடனை நாம் இறந்த விதத்தில் பயன்படுத்தினால் தான் பயன்பெறமுடியும்.

மகாவலிஅபிவிருத்தித்திட்ட மூலமும் நாம் பெரும் பயன் பெறலாம்." [ம உ]

## திருட்டு

(கரணவாய்)

பெண்மணி ஒருவர் சந்தைக்குப் போனவேளையில் வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து பல பெறுமதியான பொருட்களைக் களவாடிச் சென்றுவிட்டனராம். அல்வாய் தெற்கைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி வேலாயுதம் என்பவரின் வீட்டிலேயே இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

இத்திருட்டு சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிசார் இதேயூரைச் சேர்ந்த வாலிபர் ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் தேடி வருகின்றனர். (அ)

## பிரிவுபசாரம்

[வண்ணார்பண்ணை]

கடந்த நான்கு ஆண்டுகளுக்குமேல் ஊர்காவற்றுறைப் பிரிவு உதவி அரசாங்க அதிபராக பணிபுரிந்து சென்ற மாதம் தொடக்கம் யாழ். செயலக பொது சனத் தொடர்பு உத்தியோகத்தராக பதவியேற்றுச் சென்றுள்ள திரு. எஸ். சண்முகசுந்தரத்தின் சேவையை பாராட்டும் முகமாக கரம்பன் பொது பணிமன்றம் பாராட்டு விழா வொன்றை நடத்தியது. திரு. எம். கந்தையா தலைமையில் நடந்த இப்பாராட்டு விழாவில் கரம்பன் ஊர்காவற்றுறைப் பகுதியைச் சேர்ந்த சமூக சேவையாளர்களும், இப்பகுதி அரசாங்க அதிகாரிகளும் உரையாற்றினர். (உ)

Rio (Jaffna)
Daily 4 Shows
ALLAIN DELON
in
Purple Noon
Action (Color)

நகைமோசடி புகார்:

## சந்தேகநபரிடம் இருந்ததாம் 'பிறண்டி'

[யாழ்ப்பாணம்]

நகை செய்யக் கொடுத்த பத்துப் பவுண் தங்கத்துடன் கம்பிநீட்டியதாகக் கூறப்படும் ஒருவரிடம் இருந்து ஒரு போத்தல் பிறண்டியைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கன்னாதிட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் முருகேசு என்பவர் தம்மிடம் பணிபுரிந்த ஒருவரிடம் 10 பவுண் தங்கத்தைக் கொடுத்து நகைசெய்யச் சொன்னாராம். முருகேசுவிடம் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்ட பரமலிங்கம் தங்கத்துடன் தலைமறைவாகிவிட்டாராம்.

இதுபற்றி யாழ். பொலிசாருக்கு செய்யப்பட்ட புகாரை அடுத்து சந்தேகநபரின் சொந்த இடமான கனுவாஞ்சிக்குடியில் வைத்து கனுவாஞ்சிக்குடி பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டபோது அவரிடம் ஒரு போத்தல் பிறண்டியும், மற்றும் சில பொருட்களும் இருந்தனவாம்.

இதுபற்றி விசாரணை செய்த யாழ். விசேஷ குற்ற புலனாய்வு பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. இ. அப்பையா, சந்தேக நபரை யாழ். நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன் ஆஜர்செய்தபோது சந்தேக நபரை அடுத்தமாதம் 4ம்திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கூறி பிணையில் செல்ல அனுமதித்தார்.

விசேஷ குற்ற புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. இ. அப்பையா தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுள்ளார். [கா.-உ.]

வர்த்தகரை

## கத்தியால் வெட்டிவிட்டு விஷம் குடித்தாராம்
### இருவரும் ஆஸ்பத்திரியில்

(மட்டுவில்)

கடையில் வியாபாரம் செய்துகொண்டிருந்த கடை முதலாளியைக் கத்தியால் வெட்டியதாகக் கூறப்படும் நபர் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தினாராம்.

வெட்டியவரும், வெட்டுக்கு இலக்கானவரும் மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டுவில் வடக்கில் இச்சம்பவம் நடைபெற்றது. இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த எஸ். பொன்னையா என்பவரே வெட்டப்பட்ட நபராவார். இவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரை வெட்டியதாகக் கூறப்படும் அதே ஊரைச் சேர்ந்த தேவராஜா என்பவர் நச்சுத்திராவகம் அருந்தி மயக்கமுற்ற நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்திய சாவகச்சேரிப் பொலிசார் சந்தேக நபரான தேவராஜாவுக்கு ஆஸ்பத்திரியில் காவல் போட்டுள்ளனர்.

பொலிசார் தொடர்ந்து விசாரணை நடாத்துகின்றனர்.

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா தமது ஆட்சிக் காலத்தில் 36 தடவைகள் வெளிநாடு சென்றுள்ளதாக தேசிய அரசுப் பேரவையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு அரசு தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

மாஜி அமைச்சர் செ. குமாரசூரியர் ஒருதடவை வெளிநாடு சென்றதாகவும் பதிலளிக்கப்பட்டது. (ம-உ.)

இன்றுமுதல் குதூகலமான ஆரம்பம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைமாமணி முத்துராமன் — சந்திரகலா — ஸ்ரீவித்யா — விஜயகுமார்
அசோகன் — தேங்காய் சீனிவாசன் —மனோரமா —
சி. ஐ. டி. சகுந்தலா, மற்றும் பலர் நடித்த
காலங்களில் அவள் வசந்தம்
தன் சகோதரிக்காக தன் வாழ்க்கையையே தியாகம் செய்த மங்கையர் திலகத்தின் உருக்கமான கதை.
தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடிய ஒரு வெற்றிப் படைப்பு
புரட்சி டைரக்டர் எஸ். பி. முத்துராமனின்
மற்றுமோர் உன்னதமான சித்திரம்
நீங்கள் வெகு நாட்களாக ஆவலுடன்
எதிர்பார்த்திருந்த ஒரு குடும்பக் காவியம்

சாந்தி (யாழ்: நகர்) போன்: 7648
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன் — ராஜஸ்ரீ — பார்வையா
"அனுபவம் புதுமை"
— மர்மம், ஹாஸ்யம் — புதிய பிரதி
அடுத்து வருகிறான்! மருதநாட்டு வீரன் வெற்றி முழக்கமிட!!
6-5-78 நிதியுதவிக் காட்சி காலை 10-30, பி.ப. 2-30
"அரச கட்டளை"
6-ம், 7-ம் திகதி காலை 8-30 மணிக் காட்சி மட்டும்.
THE THREE FAT MEN
— Comedy —

# பேரவையில் 'அமிர்' விடுத்த விளக்கம்; பிரதமர் மகிழ்ச்சி

(கொழும்பு)

ஒரு அரசியல் இயக்கம் காந்திஜியின் அகிம்சைக்கொள்கையை தமது இலட்சியமாகக் கொண்டிருந்தால் அது சகல வன்முறைகளையும் பலாத்கார செயல்களையும் கண்டிக்கின்றது என்பதே அர்த்தமாகும். அதன் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு அமிர்தலிங்கம் இப்பேரவையில் தமது கட்சி காந்திஜியின் சாத்வீகக்கொள்கைகளைக் கடைப்பிடித்து வருகிறது என்று கூறியதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன், அத்துடன் அவரது கூற்றையும் ஏற்றுக்கொள்கிறேன்.

இவ்வாறு பிரதமர் திரு ஆர். பிரேமதாசா கடந்த செவ்வாயன்று தேசிய அரசுப்பேரவையில் கூறினார்.

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது எழுப்பப்பட்ட பிரச்னைக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அளித்த விளக்கத்துக்கு பதில் அளிக்கையிலேயே திரு. பிரேமதாசா கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

இளைஞர்களுக்கு மத்தியில் எழுந்துள்ள அதிருப்தியை மனதில்கொண்டே அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய விதத்தில் அபிவிருத்தித்திட்டங்களை நாம் தீட்டியுள்ளோம்.

எந்த இனத்தையோ சமூகத்தையோ, சமயத்தையோ, அரசியல் இலட்சியங்களையோ கொண்டுள்ள இளைஞர்களானாலும் சரி, வன்முறைச் செயல்களில் ஈடுபடவேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

புதிய அரசியல் அமைப்புத் திட்டம் அமுலுக்கு வந்ததும் இந்த நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் அடிப்படை உரிமைகள் வழங்கப்படும்

ஐக்கிய தேசியக்கட்சி இளைஞர் ஒருவரின் நடவடிக்கை காரணமாகவே முன்னாள் பிரதமமந்திரியின் உயிர்கூட காப்பாற்றப்பட்டது. இதை நான் முன்பொருமுறைகூட வாசித்துக்காட்டியுள்ளேன். (இ)

## கிரிக்கட் டெஸ்டில் கலாட்டா

ஜமேக்கா, மே. 3

மேற்கிந்திய— அவுஸ்திரேலிய 5வது இறுதி டெஸ்டின் இறுதி நாள் ஆட்டம் முடிவடைவதற்குச் சற்று முன்னர் நடுவரின் தீர்ப்பைஎதிர்த்து பார்வையாளர்கள் மைதானத்திற்குள் புகுந்து கலாட்டா செய்ததை அடுத்து ஆட்டம் நிறுத்தப்பட்டது.

வெற்றியடைய 369ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையிலிருந்த மேற்கிந்தியக்கோஷ்டி 258 ஓட்டங்களுக்கு 9 விக்கட்டுகளை இழந்திருந்த போதே பார்வையாளர்கள் கலாட்டா செய்தனர் மேலும் 38 பந்துகளே வீசவேண்டியிருந்தன.

9 விக்கட்டான வன்பர் ஹோல்டருக்கு எதிராகநடுவர் வழங்கிய தீர்ப்பை எதிர்த்தே அவர்கள் கலாட்டா செய்தனர். அடுத்து பொலிசார் கலாட்டாவை அடக்க வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு கூட்டத்தைக் கலைத்தனர்.

இதையடுத்து ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெறுகிறது

ஸ்கோர் விபரம்: அவுஸ்திரேலியா 345, 3—305 மேற்கிந்தியா 280, 9—259. (இ)

## தமிழகப் புயல் நிவாரணத்தில் ஆளுங்கட்சி மோசடி

### கருணாநிதி குற்றச்சாட்டு

சென்னை, மே 4

புயல்நிவாரணமாக மத்திய அரசு வழங்கிய 150 கோடி ரூபா நிதியில் 15 கோடி ரூபாவை ஆளுங்கட்சி பிரமுகர்கள் மோசடி செய்துள்ளனர் என்று திருக்குன்றத்தில் நடைபெற்ற தியாகி சம்பந்தன் விழாவில் தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவரும் தி. மு. க. தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி குற்றம்சுமத்தினார்.

விழாவில் கலைஞர் கருணாநிதி தொடர்ந்து உரையாற்றுகையில், குன்றத்தூர் சம்பந்தன் பேரறிஞர் அண்ணா, பெரியாருடன் அதிகளவு ஈடுபாடு கொண்டு, அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய செம்மல் அன்னார் காட்டிய வழியில் வந்த பின் விழிப்படைவதைவிட வருமுன் நோக்கும் போர்க்குணம் பெற்றவர்களாக நாம் மாற வேண்டும்.

இன்று நாம் எதிர்க்கட்சியாக இருக்கும் உணர்வு எழுச்சிமயமான உணர்வு, ஒரு நாள் உண்ணாவிரதம், உடம்புக்கு எவ்வாறு நல்லதோ, அதைப்போல ஒரு சில ஆண்டுகளுக்கு எதிர்க்கட்சியாக இருப்பதும் கட்சிக்கு நல்லதுதான் என்றார். (செ)

## சமூகக் குறைபாடுகள் சட்டத்தை முற்றுகமாற்றி அமைக்க வேண்டும்

(வண்ணார்பண்ணை)

"1958-ல் சமூக குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும் இச்சட்டத்தில் குறைபாடுகள் இருந்ததால் பலன் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால் 1972ம் ஆண்டில் திருத்தப்பட்ட சட்டத்திலும் குறைபாடுகள் நிறையக் காணப்பட்டதால் பலன் அற்றதாகிவிட்டது இதனால் இச் சட்டம் சமூகக் குறைபாடுகளை நீக்கும் வகையில் முழுமையாக திருத்தி நடைமுறைப்படுத்த அரசு முன்வர வேண்டும்

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை சனிக்கிழமை கூடிய மனித உரிமைவிடுதலை முன்னணி நிறைவேற்றியது.

இம்முன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் களும் நிறைவேற்றப் பட்டன.

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தீண்டாமை என்னும் பேயை விரட்டியடிக்கும் இலக்கமொன்றை நடத்தி சகல மக்களும் சமமான நிலையில் மனித உரிமை பெற்று வாழ தமிழ்த்தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது விடயத்தை மேடைப் பேச்சளவில் மட்டும் சிலர் கூறிவிட்டு தமது நடைமுறையில் இதற்கு மாறாக நடக்கும் நிலையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் பாராளுமன்றத்திற்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பிரதிநிதிகள் தெரிவு செய்வதற்கு அரசு எடுத்திருக்கும் தீர்மானத்திற்கு முன்னணி பாராட்டுத் தெரிவிக்கின்றது. இன்னும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## பஸ்ஸில் சென்ற .

(1-ம் பக்க தொடர்ச்சி)

யதில் வெளிநாட்டமைச்சர் திரு. ரனில் விக்ரமசிங்க தமக்கு இதுபற்றித் தெரியும் என்று கூறியதுடன் வளாகத் தலைவரைச் சந்திக்கத் தாம் சென்றிருந்ததாகவும் மாணவிகள் புகார் செய்ய வந்ததாக தெரியும் என்றும் கூறியதுடன் இதுபொலிசாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துவருகிறார்கள் என்றும் சொன்னார்.

மாணவர்களுக்கு பாதுகாப்புக்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

அரசுக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காகவே சிலர் வேண்டுமென்று இப்படிச் செய்கிறார்களென்றும் இதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவித்தார். மாணவ, மாணவிகள் வளாகங்களுக்குள்ளேயே பஸ்களில் பாதுகாப்புடன் சென்று இறங்க ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

பேராதனை வளாகத்தில் மாத்திரமே மாணவர்கள் சில சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் சுமார் 200 மாணவர்கள் ஏனைய மாணவர்களை குழப்ப முயன்றுள்ளார்கள் என்றும் கூறிய பதில் அமைச்சர்;

முன்னாள் இங்குராகெட்ட சுதந்திரக்கட்சி எம். பியின் மகன் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார். வளாகங்கள் ஒழுங்காக நடைபெறவும், மாணவர்கள் பாதுகாப்புக்காகப் போய்வரவும் தகுந்த ஏற்பாடு செய்யப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். (ம)

## யாழ். வளாக தமிழ்மன்ற தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் வளாக திருநெல்வேலி பிரிவு தமிழ்மன்றத்தின் தமிழ் விழா நாளையும் நாளை மறுதினமும் சிறப்பாக நடைபெறவுள்ளது

விழாவில் கவியரங்கு, ஆய்வரங்கு, கருத்தரங்கு, வழக்குரை மன்றம், பொருட்காட்சி, இசை, நடனம், நாடக நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நாளை காலை 9 மணிக்கு "நாளை மலரும் நம் வாழ்வு" என்னும் கவியரங்கு வளாக மாணவி செல்வி மாலினி கந்தசாமி தலைமையில் நடைபெறும். கவியரங்கில் கவிஞர்கள் வ ஐ ச ஜெயபாலன், புரட்சிமாறன், கோப்பாய் சிவம், காசி ஆனந்தன் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்

பகல் 10-30 மணிக்கு "தமிழர் வாழ்வும் வளமும்" என்னும் தலைப்பில் ஆய்வரங்கு திரு. இ முத்துத்தம்பி தலைமையில் நடைபெறும் ஆய்வுரைகளை வரலாறு பகுதியில் பேராசிரியர் கா. இந்திரபாலாவும், புவியியல் பகுதியில் திரு. சிவா தட்சிணாமூர்த்தியும், பொருளியல் பகுதியில் திரு. என். பாலகிருஷ்ணனும், இலக்கிய பகுதியில் திரு. சுப்பிரமணியமும் நிகழ்த்துவர்

இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு "இந்திய தமிழ்ச் சஞ்சிகைகள் கட்டுப்பாடற்ற இறக்குமதியும், ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சியும்" என்னும் தலைப்பில் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி அ. சண்முகதாசன் தலைமையில் கருத்தரங்கு நடைபெறும். கருத்துரைகள். டொமினிக் ஜீவா, கோவை மகேசன், செங்கை ஆழியான், சொக்கன் ஆகியோர் வழங்குவர்.

காலை 10-30 மணிக்கு "தமிழ் ஈழத்தை மீட்கும் பணியில் தமிழர் விடுதலைக் கூட்டணி தவறு இழைத்து வருகின்றது" என்ற தலைப்பில் வழக்குரை மன்றம், தேவன் தலைமையில் நடைபெறும். வாதிகளாக திருவாளர்கள் அ. குமரன், ந. சிறிகாந்தா, ந. சிவராஜனும், பிரதிவாதிகளாக திருவாளர்கள் பொ. கணேசமூர்த்தி, கனக மனோகரன், ஐ. சிவதாசன் வாதிடுவர்.

இரு தினங்களும் பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரை "தமிழர் வாழ்வும் வளமும்" என்னும் பொருட்காட்சி நடைபெறும். பிற்பகல் 6-00 மணி முதல் 10-30 மணி வரை பல்சுவை, கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (செ)

## மானிப்பாய் வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மிட்டாஸ் கடைச் சந்தியிலிருந்து ஒட்டுமடம் சந்திவரையிலான மானிப்பாய் வீதியில் திருத்தவேலை இம்மாதம் 8-ம் தேதி ஆரம்பமாகவிருக்கிறது.

சுமார் இருவார காலத்திற்கு இவ்வீதியில் திருத்தவேலை நடைபெறவிருக்கின்றது;

இதனால் இப்பாதையில் 8-ம் தேதி முதல் மறுஅறிவித்தல்வரை வாகனப்போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளது.

நிறைவேற்று பொறியியலாளர் இது பற்றி பொலிஸாருக்கும் இ. போ. ச. விற்கும் அறிவித்திருக்கிறார். (ச)

## ஈடிணையற்ற—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆடலே புரியும் தில்லைக் கூத்தனின் திருவடிகளில் இவர் ஆத்மா சாந்தியுறுக!

கலைமணி
எஸ்.வடிவேல்-
ஆசிரியமணி
ஆர்.ரி. சுப்பிரமணியம்

## கல்விப்பகுதி பதவிகள் இ. த. ஆசிரியர் விடுத்துள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்விப்பகுதியில் ஏற்படும் பதவி வெற்றிடங்கள், பதவி உயர்வுகளுக்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரும்போது, அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை மாவட்ட கல்வி அலுவலகத்திலேயே வைக்கவேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சின் செயலாளரை கேட்டுள்ளது.

பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் மேற்படி நியமனங்களுக்கும் பதவிஉயர்வுகளுக்கும் விண்ணப்பம்செய்துவிட்டு மிகுந்த சிரமத்தின் பேரில் கொழும்பு கல்வி அலுவலகத்திற்கு நேர்முகப்பரீட்சைக்கு செல்லவேண்டியுள்ளது.

கல்வியமைச்சு ஆரம்பநிலை நேர்முகப் பரீட்சைகளை விண்ணப்பம் செய்த கல்வி மாவட்டங்களில் நடாத்தி இறுதி நேர்முகப் பரீட்சையை கொழும்பில் வைப்பது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வசதியாக இருக்குமென குறிப்பிடப்பட்டுள்ளது (ஓ)


# WANTED

Ten Nurses Trained, And Trainee Nurses Immediately.

Apply

Secretary,
The Jaffna Private Hospital,
395, Navalar Road,
Jaffna. 9219



## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரீரங்கநாதன் தங்கராணி (பூவா)

திருமதி ஸ்ரீரங்கநாதன் தங்கராணி காலமானார். இவர் பம்பலப்பிட்டி சிற்றம்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. ஸ்ரீரங்கநாதனின் அன்பு மனைவியும், திருநெல்வேலி சட்டத்தரணி இ. சிவசுப்பிரமணியம், யாழ் நாகமுத்து அன்சன்ஸ் காசாளர் என் பி. தியாகராஜா ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரது பூதவுடல் 5-5-78 (இன்று) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30க்கு 182ம் இலக்க நாவலர் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 9225

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 5-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram 'Eenaadu' Telephone 389. Registered as a Newspaper in SriLanka